1970 செப்டம்பர் 3]

கொண்டிருக்கிற காரணத்தாலே அந்த இடத்தின் முக்கியத்துவத்தைக் கருதி இனிமேலாவது அதைச் சுற்றுலா மாளிகையாக ஆக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: ஏற்கனவே இருக்கிற மாளிகையை மேலும் புதுப்பிப்பதற்காக பொதுப் பணித் துறையில் இருந்து 22 ஆயிரம் ரூபாய் செலவழித்து அதை இன்னும் அதிகமாக அபிவிருத்தி செய்வதற்காக நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது. அதனால் இன்னும் அதிகம் வந்து தங்குவதற்கு வசதியாக இருக்கும்.

திரு. அ. மாரிமுத்து: தலைவர் அவர்களே, ஆடுதுறையிலுள்ள உயர்தர ரக நெல் விதைகளை அளிக்கக்கூடிய சக்தி வாய்ந்த இந்த விவசாய ஆராய்ச்சிப் பண்ணைக்கு அருகில் நீண்டகாலமாகக் கல்லூரி ஒன்று கட்டப்பட வேண்டுமென்ற கோரிக்கை கவனிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட செயற் குறிப்பு எதுவும் இல்லை.

International Rest House at Yercaud.

* 219 *Q.*—Thiru N. S. V. Chithan: Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare be pleased to state whether any International Rest House has to be built at Yercaud in Salem district?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: இல்லை. ஏர்க்காட்டில் குறைந்த வருவாய் உள்ள சுற்றுப் பயணிகளுக்கான ஓய்வு விடுதி ஒன்று கட்ட செயற்குறிப்பு உள்ளது.

திரு. என். எஸ். வி. சித்தன்: அந்த ஓய்வு இல்லத்திற்கு மொத்தம் என்ன செலவாகும்? எப்பொழுது கட்டி முடிக்கப்பட இருக்கிறது? அதேமாதிரியான ஓய்வு இல்லங்களை ஏர்க்காடு போன்ற உல்லாச பயணிகள் தங்குகின்ற இடங்களிலேயும் கட்டிக் கொடுக்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: கேள்வி ஏர்க்காடு பற்றியதுதான். ஏற்கனவே 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டவேண்டுமென்று திட்டம் தீட்டினோம். நிதிக் குழுவினர் அதைக் குறைத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டதற்கு இணங்க ஒரு லட்சத்து இரண்டாயிரம் என்று குறைத்து அந்த அளவிலே கட்டவேண்டுமென்று கேட்டு இருக்கிறோம். பொதுப் பணித் துறை பொறியியல் வல்லுநர்கள் நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள், இன்னும் திட்டம் தரப்படவில்லை. வந்த பிறகு அந்த அளவிலே ஒரு மாளிகை அங்கே கட்டப்படும்.

திரு. எஸ். ஜே. ராமசாமி: தலைவர் அவர்களே, கட்டடங்கள் கட்டுவதற்குக் காரணம் மற்ற நாடுகளிலிருந்து பயணிகள் வந்தால் தங்குவதற்குக் கட்டப்படுகிறது. அப்படியானால் மத்திய சர்க்காரிடமிருந்தோ அல்லது வெளிநாட்டிலிருந்தோ உதவி பெற்றுச் செய்வதற்கு அமைச்சர் அவர்கள் முயற்சிப்பார்களா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: அனைத் துலகப் பயணிகள் தங்குவதற்கு விடுதிகள் ஏற்படுத்த வேண்டுமென்று அரசு எண்ணுகிறது. தனியார் துறையிலிருந்து கட்டுவதற்கு முன் வந்தால் மத்திய அரசு உதவ ஒப்புதல் அளித்திருக்கிறது. அந்த வகையிலேதான் சென்னையிலே ஒரு ஹோட்டல், ஹோட்டல் ஸ்டால் கட்டுவதற்காக இடம் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். இன்னும் கிடைக்கவில்லை. கிடைத்ததற்குப் பிறகு கட்டுவதற்குத் தயாராக இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. தி. பொன்னுமலை: தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத் திலே இருக்கிற ஏர்க்காட்டிற்கு மறைந்த பேரறிஞர் அண்ணா அவர் களும், தற்பொழுதைய முதலமைச்சர் அவர்களும், கல்வி அமைச்சர் அவர்களும் வந்திருந்தபொழுது ஏர்க்காட்டைப் பெரிய உல்லாசப் பயணிகள் வருகின்ற இடமாகவும், உல்லாச நகரமாகவும் மாற்ற வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அங்கே மற்ற நாடு களிலிருந்து வந்து படிக்கக்கூடிய அளவிற்கு கான்வென்ட் கூட இருக் கிறது. எனவே, அப்படிப்பட்ட இடத்தை உல்லாசப் பயணிகள் வருகின்ற இடமாகவும் உல்லாச நகரமாகவும் ஆக்குவதற்கு ஏற் பாடுகள் செய்ய அரசாங்கம் முன் வருமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: நான் அதைத்தான் முதலிலே சொன்னேன். 1.2 லட்சம் ரூபாய்க்கு ஒரு பயணிகள் விடுதி கட்டுவதற்குத் திட்டம் இருக்கிறது. விரைவிலே கட்டுவதற்கு அரசாங்கம் எடுத்துக்கொண்டுள்ள திட்டமாகும்.

திரு. ந. தீர்த்தகிரி: ஏர்க்காட்டிலே சுற்றுலா மாளிகை கட்டு வதற்கு உத்தேசம் இருப்பதாகச் சொன்னார்கள். அதுபோன்ற சுற்றுலா மாளிகை தாராபுரம் வட்டத்திலே உள்ள ஹொகனக் கல்லிலே கட்டுவதற்கு, ஒரு டூரிஸ்ட் செண்டராக அதை ஆக்குவதற்கு மத்திய சர்க்காரின் உதவியின்பேரில் ஏற்படுத்துவதற்கு உத்தேசம் உண்டா? அப்படியெனில் இது சம்பந்தமாக என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: ஹொகனக்கல்லிலே பயணிகள் விடுதி அமைக்க வேண்டுமென்று அந்த மாவட்டத்தின் ஆட்சியாளர் ஒரு திட்டம் கொடுத்திருக்கிறார் கள். பொதுமக்களிடமிருந்து நிதி வசூல் செய்வதற்கும் அவர்கள் ஒப்புதல் அளித்திருக்கிறார்கள். அது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது.

State Trading in Foodgrains.

* 220 *Q*.—THIRU T. MARTIN: Will the Hon. the Minister for Food and Commercial Taxes be pleased to state—

(*a*) whether there is any proposal pending now before the Government to introduce State Trading in Foodgrains; and

(*b*) if so, the particulars thereof?